Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

JAFFNA COLLEGE 20 JAN 1972 UNDERGRADUATE LIBRARY

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 15
இதழ் 339

யாழ்ப்பாணம் தை 6 துல்ஹஜ் 3 வியாழக்கிழமை (20-1-72)

சகலவிதமான
றேடியோக்களும்
திருப்திகரமான முறையில்
உத்தரவாதத்துடன்
திருத்திக்கொடுக்கப்படும்

V. K. இராசரத்தினம்
95, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.
போன்: 7447

# தொகுதி, மாவட்ட ரீதியாக அரசசேவைக்கு நியமனம்

## தகுதி-திறமை-சேவை அடிப்படையாக வேண்டும்

### ஆளும்கட்சிக் கூட்டத்துக்கு வரும் முக்கிய பிரேரணை

கொழும்பு, புதன். அரசாங்க சேவைக்கும் அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கும் ஆட்களைத் தெரிவுசெய்வதிலும் பதவி உயர்வு, இடமாற்றம் ஆகியவைகளிலும் தகுதி, திறமை சேவை ஆகியவைகளே அடிப்படையாக இருக்க வேண்டும். இச்சேவைகளுக்கு நியமனம் செய்யும்போது தொகுதி அல்லது மாவட்ட ரீதியில் ஆட்கள் தெரிவு செய்யப்படும். இப்படிச் செய்வதால் வேலைவாய்ப்புக்கள் நாடு முழுவதும் பகிர்ந்தளிக்கப்படுவது உறுதியாகும்.

இவை ஆளும்கட்சி உறுப்பினர்கள் பலரின் அபிப்பிராயமாகும். இன்னும் சில தினங்களில் ஆளும்கட்சிக் கூட்டம் நடைபெறும்போது இந்த யோசனைகளை அவர்கள் வலியுறுத்தவிருக்கின்றனர்.

தகுதி, திறமை, சேவை அடிப்படையிலேயே அரசாங்க சேவையிலும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிலும் நியமனம், இடமாற்றம், பதவி உயர்வு ஆகியவை அளிக்கப்பட வேண்டுமென்று கோரும் பிரேரணையொன்றை புலத்சிங்களப் பிரதிநிதி திரு மகின முனசிங்காவும் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு டி பி இலங்கரத்னாவும் கூட்டாகக் கொண்டுவந்துள்ளனர். இவ்வாரம் ஆளும் கட்சிக்

(6-ம் பக்கம் பார்க்க)

விவசாயக் கடன்:

## தவறானவழியில் செலவானால் கடும் நடவடிக்கை

கொழும்பு, புதன். விவசாய அபிவிருத்திக்கென அரசாங்கத்திடமிருந்து பணஉதவி பெற்று அதைத் தவறான வழியில் பயன்படுத்தியவர்கள் மீது அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுக்கவிருக்கிறது.

இவ்விதம் விவசாய அமைச்சிடமிருந்து பண உதவி பெற்ற பலர் தங்களுக்குரிய நிலங்களை மற்றவர்களிடம் கொடுத்திருப்பது விவசாய காணி அமைச்சுக்குத் தெரியவந்துள்ளது. இவ்விதமானவர்களின்மீது அரசு கடும் நடவடிக்கை எடுக்காவிட்டால் நாட்டில் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய முடியாமற்போய்விடுமென பல நிறுவனங்கள் அமைச்சுக்கு அறிவுறுத்தியுள்ளன. இப்படிப்பட்டவர்களின் நிலங்களை அமைச்சு எடுத்து இப்பொழுது வேலைசெய்யும் விவசாயிகளுக்குக் கொடுக்குமாறு இந்நிறுவனங்கள் விவசாய காணி அமைச்சைக் கேட்டுக்கொண்டுள்ளன எனத் தெரியவருகிறது. (நா)

## ரயிலில் பட்டதாரி மாணவிகள் கும்மாளம்

யாழ்ப்பாணம், வியா. யாழ்ப்பாணத்திலிருந்து தைப் பொங்கலைக் கழித்துவிட்டு கொழும்பு திரும்பிய ரயில் பிரயாணிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை மிகுந்த கஷ்டங்களை அனுபவிக்க நேரிட்டது என்று அதில் பிரயாணம் செய்த பலர் கூறினர்.

இந்த ரயிலில் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குச் சென்ற பட்டதாரி மாணவர்களும் பிரயாணஞ் செய்தனர். இந்த மாணவர்கள் ரயிலில் தீயவார்த்தைகளை ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டது மட்டுமல்ல, சக பிரயாணிகளுக்கு துன்பந்தரும் வகையிலும் புதிய மாணவர்களை கேலி செய்தனர். இந்தச்சேட்டைகள் பேராதனை புகையிரத நிலையம்வரை நடைபெற்றதோடு, புதிய மாணவர்கள் தங்கள் சப்பாத்துக்களை தலையில் வைத்து புகையிரத மேடையில் நடத்திச் செல்லப்பட்டனர் பாவம் அப்பாவி மாணவர்கள் படிக்கச் சென்றார்கள், ஆனால் தம் சப்பாத்தை தலையில் சுமக்கும் அனுபவமே அவர்களுக்கு முதலில் ஏற்பட்டது.

ஆண்களா இந்த கொட்டம் அடித்தார்கள்! இல்லை. ஆண்களையும் மிஞ்சிவிட்டார்கள் பெண்பட்டதாரி மாணவிகள். முதல் வகுப்பு மாணவிகளை அவர்கள் படுத்தியபாடு கண்டு சக பிரயாணிகள் அதிர்ச்சி அடைந்தனர். இவர்களின் இரக்கமற்ற செயலைக்கண்ட பிரயாணிகளுக்கு மேலும் ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. அதுதான் யாழ்ப்பாணத்துத் தமிழ் மாணவிகளே இப்படிச் செய்தார்களாம்.

## இந்திய ஒருமைப்பாடே தி. மு. க. கொள்கையாம்

தஞ்சாவூர், ஜன. 19. தி.மு.க. இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு முதலிடம் அளிக்கிறது. அதன் பின்பே மாநில சுயாட்சி என்று தமிழ்நாடு முதலமைச்சரும் தி.மு.க. தலைவருமான டாக்டர் மு. கருணாநிதி கூறியுள்ளார்.

தஞ்சாவூரில் நடைபெற்ற தி.மு.க. பொதுச்சபையின் இரண்டுநாள் கூட்டத்தின் முடிவில் திரு. மு. கருணாநிதி பேசினார்.

அவர் மேலும் பேசுகையில், எமது மாநில சுயாட்சிக் கோரிக்கை பிரிவினைப் பார்வை அடிப்படையாகக் கொண்டதல்ல. மாநில சுயாட்சிக்கும் சுதந்திர நாட்டுக்கும் வேறுபாடு தெரியாமல் சிலர் நான் வங்காளதேஷ் தலைவரைப் பின்பற்றி பிரிவினை கோருவதாகக் கூறுகின்றனர். இது தவறானதாகும். இவ்விதம் நான் எப்பொழுதும் தமிழ்நாட்டை வங்காளதேஷ் நிலையோடு ஒப்பிட்டுப் பேசிய

[5-ம் பக்கம் பார்க்க]

## திடீர் பரிசோதனையில் வியாபாரிகள் பலர் சிக்கினர்!

யாழ்ப்பாணம், வியா. யாழ் மாவட்ட விலைக் கட்டுப்பாடு உத்தியோகத்தர்கள் திடீர் பரிசோதனைக் குழு ஒன்றை உருவாக்கி மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் கடந்த இரு வாரங்களாக நடத்திய திடீர்வேட்டையில் கொள்ளை லாபமடித்த சில வியாபாரிகள் சிக்கிக்கொண்டனர்.

விலைக்கட்டுப்பாட்டு அதிகாரியின் உத்தரவின் பேரிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

திடீர்ப் பரிசோதனை குழுவினர் சுன்னாகம் சந்தைக்கு திடீர் விஜயம்செய்து வியாபாரிகளை சின்னவெங்காயத்தை கட்டுப்பாட்டு விலைக்கு விற்கும்படி ஏற்பாடு செய்தனர் மக்கள் கியூவில் நின்று சின்ன வெங்காயத்தை கட்டுப்பாட்டு விலைக்கு வாங்கிச் சென்றனர். விலைக்கட்டுப்பாட்டு குழுவின் மேற்பார்வையில் விற்பனை நடைபெற்றது.

தெல்லிப்பளையில் பசளை விற்பனையில் கொள்ளைலாபமடித்த வியாபாரி ஒருவர் இக்குழுவிடம் சிக்கிக்கொண்டார். நல்லூர் சந்தையில் உள்ள பிரபல வர்த்தகர் ஒருவர் சின்ன வெங்காயத்தை கூடிய விலைக்கு விற்றதால் சிக்கிக்கொண்டார்.

ஊர்காவற்றுறையில் பசளை விற்பனையில் லாபமடித்ததற்காக ஒருவர் சிக்கிக்கொண்டார். மெழுகுவர்த்தியில் கொள்ளை லாபமடித்த வியாபாரியொருவர் மானிப்பாயில் சிக்கிக்கொண்டார். சண்டிலிப்பாயில் சின்ன வெங்காயத்தை கூடிய விலைக்கு விற்ற ஒருவரும் எழுதுமட்டுவாளில் அப்பியாசக்கொப்பிகளை கூடிய

[5-ம் பக்கம் பார்க்க]

## 12 வயதுச் சிறுவன் மின்சாரத்திற்குப் பலி!

யாழ்ப்பாணம், வியா. நகரசபை மின்சாரப் பகுதியினரின் கவனக்குறைவு காரணமாக 12 வயதுச் சிறுவன் ஒருவர் பரிதாபமாக மாண்ட சம்பவம் வல்வெட்டியில் நடைபெற்றது. ஐயாத்துரை இரத்தின கோபால் என்னும் இச்சிறுவன் அதிகாலை பால் விநியோகிக்கச் சென்றபோது மின்சாரம் தாக்கியதாலேயே மரணமானார்.

'நகரசபை மின்சார அதிகாரிகளும் ஊழியர்களினதும் பொறுப்பின்மையாலேயே இச்சிறுவன் பரிதாபகரமாக மரணமடைய நேரிட்டது என்று வல்வை இந்திராணி ஆஸ்பத்திரியில் இம்மரணம் சம்பந்தமாக விசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். தாமோதரம்பிள்ளை விசாரணையின் போது தெரிவித்தார்.

இரத்தினகோபால் அதிகாலை பால் விநியோகிக்கச் சென்று கொண்டிருந்தபோது மின்கம்பத்துடன் பொருத்தப்பட்டிருந்த கம்பியில் பிடித்தபோது மின்சாரத்தினால் தாக்குண்டு தூக்கிவீசப்பட்டு ஸ்தலத்திலேயே மரணமானார்.

விபத்தினால் ஏற்பட்ட மரணமென மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார். வல்வைப் பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர். (வ.வெ)

## பிரயாணிகள் கஷ்டம்

நெடுந்தீவு, புதன். நெடுந்தீவு குறிகாட்டுவானுக்கிடையில் நேற்று முதல் படகு சேவைகள் எதுவுமே நடைபெறாததால் பிரயாணிகள் பெரும் கஷ்டத்துக்குள்ளான நெடுந்தீவு கிராமசபைத் தலைவர் தெரிவிக்கிறார்

REGAL (Jaffna)
Daily 5-15 & 7-15 p.m.
Sat. Sundays 10-30
James Coburn
in
HARD CONTRACT

தினசரி 2-00, இரவு 9-45
எம். ஜி. ஆர். - நாகேஷ்
விஜயகுமாரி
நடித்த
பூமாலை

MANOHARA
(Jaffna)
Daily 4 Shows
Catherine Denueve
in
BENJAMIN
(Strictly for adults only)
(Color)

சாந்தி
(சங்கானை)
வி. வெ. சனி 4-15 மட்டும்
MOST BEAUTIFUL
WOMAN IN THE
WORLD

தினசரி 6-15, 9-30
ஞாயிறு 2-30
ஜெமினி-கே ஆர் விஜயா
நடித்த
சங்கமம்

நியூ கலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, இரவு 10-00
சனி ஞாயிறு 2-30
எஸ். எஸ் ஆர் - தேவிகா
நடித்த
மறக்க முடியுமா

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். இரு வேடங்களில்
ஜெயலலிதா - அசோகன்
நடித்த
நீரும் நெருப்பும்

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி — ஜெயலலிதா
முத்துராமன் - நாகேஷ்
நடித்த
சவாலே சமாளி

இப்பொழுது நடைபெறுகிறது!
வெலிங்டன் - லிடோ
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்



பத்மஸ்ரீ
★ சிவாஜி கணேசன்
★ பத்மினி
★ நாகேஷ் ★ தங்கவேலு
நடித்த
சிவாஜி புரடக்ஷன்ஸ்
வியட்நாம் வீடு


## வரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஓட்டு வேலைகள், பல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gear wheel cutting) என்ஜினியர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராஜா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3846

### வைத்தியம்

ஆலோசனை இலவசம். பல் கட்டுதல் அரைச் சனார் Rs 150/-. சிங்கப்பூர் பல் கம்பனியிடம், A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 2ம் மாடி ஆஸ்பத்திரி வீதி - பெரிய கடை, யாழ்ப்பாணம். 3869

வாதம், இரத்த தொய்வு ஆகிய வியாதிகளை முற்றுக் குணப்படுத்துவதில் திறமை பெற்ற டாக்டர் எஸ். வல்லிபுரம் (D A M) தங்கராஜேஸ்வரன் வைத்தியசாலை, இராசா வீதி நல்லூர் மார்க்கெட், யாழ்ப்பாணம். 3898

### சோதிடம்

நிறம், வயது, பூவின் பெயர், குறித்த, 15 சத முத்திரையுடன் உறைவனுப்பிப் பதில் பெறவும், இலவச சேவை மனோதத்துவ ஆருடம், ஞானபண்டித வைத்தியசாலை, அதிபர் த. சண்முகராஜா. கொக்குவில். 3900

### தவறிவிட்டது

நேற்றுக் காலை கொடிகாமத்துக்கும் வரணிக்குமிடையில் காரின் மேலிருந்து ரவிக்பாக் தவறிவிட்டது பெறுமதியான பொருட்கள் அதனுள் இருப்பதால் தயவு செய்து அதைக்கண்டெடுத்தவர்கள் ஈழநாடு அலுவலகத்திலோ, அல்லது க. சற்குணலிங்கம், கே. கே. எஸ். ரோட், வல்வெட்டித்துறை என்ற முகவரியிலோ ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். 3895


யாழ். தியேட்டர்
(காங்கேசன்துறை)
தினசரி 6-15, இரவு 9-30
சனி, ஞாயிறு 2-30
எம்ஜிஆர். - சரோஜாதேவி
எங்கவீட்டுபிள்ளை
(ஈஸ்ட்மன்கலர்)

நாகம்ஸ் சினிமா
கன்னாதிட்டி
4-15, 7 & 9-45 p m.
LET THEM LIVE
(color)

வெல்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-30, 10-00
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி - வாணிஸ்ரீ
நடித்த
தபால்காரன்
தங்கை


### விற்பனைக்கு

திறமான வாசனை மிக்க சோடா ஆத்தர், சோடாவில் கலப்பதற்கும் கடுஞ்சிவப்புச் சருட்டுத் தயாரிப்பதற்கும் உபயோகமானது. பாவனையாளர்களால் மிகவும் விரும்பப்படுவது. எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, 53 கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம். 3845

மன்னார். பூநகரி ரோட்டில் பத்தாம் கட்டையில் இருபோகம் வேளாண்மை செய்யக்கூடிய நீர்ப்பாய்ச்சல் வசதியுள்ள நெற்காணி இருநூறு ஏக்கர். இருபத்தைந்து ஏக்கர் துண்டுகளாகப் பிரித்து விற்கப்படும். சைக்கிள் இன்வெஸ்மென்ட், 6, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 3902

வட்டுக்கோட்டை அடைக்கலம்தோட்டம் கந்தசாமி கோவிலுக்கு அருகாமையில் உள்ள கல்வி ஒழுங்கையில் 10 பரப்புக் காணி பனைகளுடன் வீடு கட்டக்கூடிய காணி விற்பனைக்குண்டு 494, காங்கேசன்துறை வீதி, தட்டாதெரு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தாருடன் ஞாயிற்றுக்கிழமையில் தொடர்புகொள்ளவும். 3893

### கல்வி

ஆரம்ப வகுப்புகள், ஜி. சி. ஈ., அரசாங்க எழுதுவினைஞர்க்கான சகல பரீட்சைகளுக்கும் தபால் மூலம் சிங்களம் கற்பிக்கப்படும். வெற்றிவேல் போதனா நிலையம் (தபால் மூலக் கல்விப் பகுதி) கொக்குவில் மேற்கு. கொக்குவில். 3888

### வசியம்

வாழ்க்கையில் திட்டமிடும் காரியங்களை நிறைவேற்றுவதற்கு மட்டக்களப்பு மாந்திரிக வசியம் செய்து அனுப்பப்படும். பெயர் விபரங்களுடன் இருபாலரும் தொடர்பு கொள்ளலாம். ரகசியங்கள் வெளியிடப்படமாட்டாது. ஏ. எஸ். குட்டி, 57, சென்றல் ரோட், மட்டக்களப்பு. 3886

### தவறிவிட்டது

மூன்று கப்பன்களும் இரண்டு கார்டும் தவறிவிட்டன கண்டு எடுத்துப் பண்ணைத் தபால் அதிபரிடம் கொடுப்பவருக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும். 3889

வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலய ஆசிரியர் வே. இராசஇரத்தினம் ஆகிய நான் எனது மூக்குக்கண்ணாடியை இழந்துவிட்டேன். அதைக்கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்திற்கு அறிவிக்கவும். அன்றேல் தங்கள் விலாசத்தை அறிவித்தால் நேரில் வந்து பெற்றுக்கொள்கிறேன். சன்மானம் வழங்கப்படும்; வே. இராசஇரத்தினம். 3899

### தேவை

வைத்திய நிலையத்தில் கடமையாற்றுவதற்கு ஆங்கில அறிவுடைய பெண் தேவை. பிணைப்பணம் ரூபா 300/- 22-ந் திகதிக்கு முன் நேரில் வரவும். நாதன் வைத்திய நிலையம் பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் கோப்பாய். 3904

## வெளிநாடு செல்வார்

கொழும்பு, புதன் இலங்கை சர்வதேச வங்கியின் ஆரம்பகால டைரக்டர்களில் ஒருவரான டாக்டர் ஹட்சன் சில்வா நாட்டைவிட்டு வெளிநாடு செல்ல முடிவுசெய்திருப்பதாகத் தெரிகின்றது. வெளிநாடுகளுக்குக் காசை அனுப்புவதில் ஏற்படும் தடைகளின் காரணமாகவே அவர் இவ்வாறு முடிவுசெய்திருப்பதாகத் தெரிகின்றது. (சி பி ஏ)

## சுங்க ஏல விற்பனை

சினிமா ஒலிபெருக்கியின் கரிக்கட்டைகள் (Carbon-Rods) மேசைப் பூட்டுகள், 200 வானொலி அலைவாங்கிகள், 6 வானொலிகள், 1 கசெற் ஒலிவாங்கிகள், 150 சிலிண்டர் டார்ச் லைட்டுகள். 8 டசன் பொற்கொல்லரின் ஆயுதங்கள், பொற்கொல்லரின் தராசுகள், பாவித்த மீன்பிடி வலைகள், 3 செப்புப் பாத்திரங்கள், 2 அவுட் போட் மோட்டர்கள், மின்சார உபகரணங்கள் மற்றும் வானொலிக்கு உபயோகிக்கும் டிரான்சிஸ்டர்கள், கப்பசிட்டேட்டர்ஸ் (Capacitators) வானொலி திருகிகள் ஆகியன பிரசித்த ஏலத்தின் மூலம் யாழ்ப்பாண சுங்க இலாகாவில் 1972-ம் ஆண்டு தைமாதம் 28-ம் திகதி காலை 10 மணிக்கு விற்கப்படும். பொருட்கள் ஏல விற்பனைத் தினத்தன்று காலை 9 மணி தொடக்கம் ஏலவிற்பனையில் பங்குபற்றுவோர் பார்வையிடலாம்.

1954 வைகாசி மாதம் 28-ம் திகதி 10675-ம் நம்பர் அரசாங்க வர்த்தமானியில் (பகுதி I பிரிவு IIஅ) கொடுக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளுடன் கீழ்க்காணும் நிபந்தனைகளும் இப்பொருட்களை விற்கும் விடயத்தில் அனுஷ்டிக்கப்படும்.

1. விற்கப்படும் பொருட்கள் யாழ்ப்பாணக் குடா நாட்டைவிட்டு வெளியே கொண்டு செல்ல வேண்டும்.

2 ஏலவிற்பனையில் வாங்கிய பொருட்களை விற்கும் வியாபாரிகள் கணக்குப் புத்தகங்களில் விபரங்களைச் சரியாகக் குறிக்க வேண்டும்.

பொருட்களை வாங்குவோர் சுங்க சேகரிப்பாளர்களின் திருப்திக்கமைய மேலே குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட வேண்டும்.

விற்கப்படும் பொருட்களைப்பற்றியும் நிபந்தனைகள்பற்றியும் இன்னும் விபரங்கள் சுங்க சேகரிப்பாளர் விடம் பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். எம். ஜே. சேனரத்ன
யாழ். மாவட்ட சுங்க சேகரிப்பாளருக்காக.
சுங்க இலாகா.
யாழ்ப்பாணம்,
4-1-1972. 3390

## ஆட்பதிவுச்சட்டம் அமுல்

கோட்டை, புதன் மாசி முதல் ஆவணி மாதம் வரை ஆட்பதிவு செய்து கொள்ளும் சட்டத்தின் கீழ் அடையாள அட்டை வழங்குவதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு ஆள் பதிவு அதிகாரியினால் நியமிக்கப்படும் கிராம சேவகர்கள் ஒவ்வொரு வீடுகட்கும் சென்று விண்ணப்பப்பத்திரங்களை விநியோகிப்பர்.

18 வயதுக்கு மேற்பட்ட இலங்கையரும், நாடற்ற பிரஜைகளும் இச்சட்டத்தின்படி பதிவு செய்து கொள்ளவேண்டும். வெளிநாட்டு "பாஸ்போட்" உள்ளவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படமாட்டா. ஒவ்வொரு பகுதியிலும் முன்னவர்களின் அதிகாரப் பிரிவேடுகள் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. அதன் பின் அடையாள அட்டைகள் பெறவேண்டியவர்கள் தமது விண்ணப்பப்பத்திரங்களை நிரப்பி புகைப்படங்களை இணைத்து அனுப்ப வேண்டுமெனத் தெரிகிறது. ஆட் பதிவுக்கிளைகள் ஒவ்வொரு மாவட்ட கச்சேரிகளிலும் திறக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


வின்ஸர் — யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
★ எம். ஜி. ஆர். ★ ஜெயலலிதா
(இரு வேடங்களில்)
★ ராஜ்ஸ்ரீ ★ நம்பியார்
★ நாகேஷ் ★ சுந்தரராஜன்
மற்றும் பலர் நடித்த
ஈஸ்ட்மன் வர்ணச் சித்திரம்
குடியிருந்த கோயில்
(புத்தம் புதிய கொப்பி)

பங்களாதேஷ் அங்கீகாரம்

# ஐரோப்பியபொதுச்சந்தைநாடுகள் ஆலோசனை

## ஆஸ். இவ்வார இறுதிக்குள் அங்கீகரிக்கும்?

லண்டன், ஜனவரி 19

**புதிய பங்களாதேஷ் குடியரசை அங்கீகரிப்பதுபற்றி ஐரோப்பிய பொதுச் சந்தை நாடுகள் ஆலோசனை செய்துவருவதாகத் தெரிகிறது.**

**இவ்விஷயமாக பிரிட்டன் பொதுச்சந்தை நாடுகளுடன் ஆலோசனை செய்துவருவதாக பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் சேர் டக்ளஸ் ஹியூம் காமன்ஸ் சபையில் தெரிவித்துள்ளார்.**

பங்களாதேஷ் குடியரசை அங்கீகரிப்பதுபற்றி உலகின் பலநாடுகள் தமது நட்புறவு நாடுகளுடன் ஆலோசனை கலந்துவருவதாகத் தெரிய வருகிறது. பிரிட்டன் ஐரோப்பியப் பொதுச்சந்தை நாடுகளுடனும் காமன்வெல்த் நாடுகளுடனும் ஆலோசனை செய்துவருவதாகவும் இது பற்றி விரைவில் இன்னோர் அறிக்கையைத் தான் சபைக்கு விட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

### 10 லட்சம் பவுண்

பங்களாதேஷ் நிவாரணத்துக்காக மேலும் பிரிட்டன் 10 லட்சம் பவுண்களை வழங்க முடிவு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரத்தில் மேற்கு ஜெர்மனியும் பிரான்சும் இதுபற்றி நட்புறவு நாடுகளுடன் ஆலோசனை செய்து வருகின்றன. இத்தகவலை பிரஞ்சு வெளியுறவு அமைச்சர் திரு சூமான் டோக்கியோவில் தெரிவித்தார்.

### ஆஸ். அங்கீகரிக்கும்

இந்தவார இறுதிக்குள் அவுஸ்திரேலியா பங்களாதேஷை அங்கீகரிக்குமென அங்காராவில் அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தோனேஷியாவும் விரைவில் பங்களாதேஷை அங்கீகரிக்குமெனத் தெரிய வருகிறது. இந்தோனேஷியாவின் இம்முடிவை ஜாகர்த்தாவிலுள்ள பாகிஸ்தான் தூதரிடம் தெரிவித்துள்ளதாக இந்தோனேஷிய வெளியுறவு அமைச்சர் திரு ஆதம் மாலிக் தெரிவித்தார்.

## பாகிஸ்தான் எனக்கு வேண்டாம்

### பூட்டோவுக்கு முஜிபுர் பதில்

டாக்கா ஜன 19

"பாகிஸ்தான் எனக்கு வேண்டாம்" என்று பங்களாதேஷ் பிரதமர் ஷேக் முஜிபுர் ரஹமான் தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் ஐக்கியத்தைக் காப்பதற்காகதனது ஜனாதிபதிப் பதவியைக் கூட ஷேக் முஜிபுரிடம் ஒப்படைக்கத் தாம் தயாராக இருப்பதாக ஜனாதிபதி பூட்டோ கூறிய கருத்துக்கு பதிலளிக்கும்முகமாகவே முஜிபுர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் பாகிஸ்தானில் தேர்தல் முடிந்தபின் என்னிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்க ஜனாதிபதியாக இருந்த யாஹியாகான் விரும்பினார். அதற்கு இடையூறாக இருந்தவர் பூட்டோதான் என்று தெரிவித்துள்ளார்.

### புத்தசின்னம்

கொழும்பு, புதன்

49 புத்தசின்னங்களையும் மற்றும் இதுசம்பந்தப்பட்ட 35 புராதனப் பொருட்களையும் வீரகெட்டியாவுக்கு அண்மையிலுள்ள குகையொன்றில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.





குளிர்மையான,
மெந்தோல் பில்டர் முனை
சிகரெட்டுக்கள். தற்கால நவீன
புகையின்பத்திற்கு
பசுமையுடன் உங்களை
அழைத்துச்செல்வன

நீடிய குளிர்மையான மறுமலர்ச்சி மெட்டஹோன்

CTC சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்


## வங்காளிகளல்லாதோர் கொடுமைக்குள்ளாகவில்லை

### ஐ. நா. விசேஷ தூதுவர் கருத்து

நியூயோர்க் ஜன 19

பங்களாதேஷில் வங்காளிகளல்லாதவர்கள் கொடுமைப்படுத்தப்படவில்லையென ஐக்கிய நாடுகள் சபைப் பொதுக் காரியதரிசியின் விசேட தூதுவர் தெரிவித்துள்ளார்.

இவ்விசேட தூதுவர் பங்களாதேஷுக்கு விஜயம் செய்துவிட்டு நியூயோர்க் திரும்பியபின் பொதுக்காரியதரிசிக்கு சமர்ப்பித்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

முன்னாள் கவர்னர் ஏ எம் மாலிக் உட்பட வங்காளிகளல்லாதோர் பங்களாதேஷில் கொடுமைப்படுத்தப்படுவதாக பாகிஸ்தான் முன்பு ஐ நா வில் புகார் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

'இந்தியா பற்றிய

## கீஸிங்கர் கருத்து பொய்யானவையாம்'

### ஆண்டர்சன் கூறுகிறார்

நியூயோர்க், ஜனவரி 19

இந்தியா தனது எல்லையை விஸ்தரிக்கமுயலுகிறது என்று அமெரிக்க அதிபர் நிக்ஸனின் ஆலோசகர் டாக்டர் கீசிங்கர் இந்தியாவுக்கு எதிராக கூறிய கருத்துக்கள் முழுவதும் பொய்யானவை என்று பிரபல பத்திரிகையாளர் ஆண்டர்சன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் அதிபர் நிக்ஸனின் நிர்வாகத்திற்கு பெரும் தலையிடியைக்கொடுத்துவரும் இவர் மேலும் அதிர்ச்சியான ரகசியத்தகவல் ஒன்றை வெளிப்படுத்தியுள்ளார்.

டாக்டர் கீஸிங்கர் கூறிய கருத்துக்களுக்கு மாறாகவே அமெரிக்க உளவு ஸ்தாபனத்தின் (சி ஐ ஏ) அறிக்கைகளில் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவர் எழுதியுள்ளார்.

டாக்டர் கீஸிங்கர் இந்தியா மேற்குப்பாகிஸ்தானையும் கைப்பற்ற திட்டமிட்டிருந்ததாகத் தெரிவித்திருந்தார். இக்குற்றச்சாட்டு மிகவும் பொய்யானதெனவும் அமெரிக்க உளவு ஸ்தாபன அறிக்கையில், மாறாக இந்தியா போர் நிறுத்தம் செய்ய முடிவுசெய்ததாகவும் அதற்கு தனது எல்லையை விஸ்தரிக்கும் நோக்கம் இருந்ததில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது என ஆண்டர்சன் எழுதியுள்ளார்.

## லெ. ஜெனரல் ஜா காலமானார்

புதுடில்லி, ஜன 19

புதுடில்லி கவர்னர்லெப்டினன்ட் ஜெனரல் ஏ என் ஜா மாரடைப்பினால் காலமானார். இவருக்கு வயது 60. 1911ம் ஆண்டு அலகபாத்தில் பிறந்த இவர் இந்திய அரசாங்கத்தில் பல உயர் பதவிகளை வகித்தார். 1966ம் ஆண்டு புதுடில்லி லெப்டினன்ட் கவர்னராக பதவி ஏற்றார். இவரதுமறைவுக்கு இந்திய ஜனாதிபதி வி வி கிரியும் பிரதமர் திருமதி காந்தியும் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

## பொங்கல் கொண்டாடினர்

யாழ்ப்பாணம், வியாழன்

தைப்பொங்கல் தினத்தன்று கோண்டாவில் வடக்கு ஸ்ரீவாகீஸ்வரி சனசமூகநிலையத்தினர் பொங்கல் விழா கொண்டாடினர். கொக்குவில் கிராமசபைத் தலைவர் திரு. சி. க. சபாபதி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. மு ஆலாலசுந்தரம், பண்டிதர் நா. இராசையா, திருவாளர்கள் ம. சின்னத்துரை, த. அருணாசலம், க. முருகையா ஆகியோர் உரையாற்றினர். விழாவில் விவாத அரங்கும் இடம் பெற்றது. விவாதஅரங்கில் வெற்றிபெற்றவர்களுக்கு கொக்குவில் கி. ச. உறுப்பினர் திரு. த. அருணாசலம் பரிசு வழங்கினார்.

## 10 கோடி டாலர் போதைப்பொருள்

நியூயோர்க் ஜன 19

10 கோடி டாலர் பெறுமதியானபோதைப்பொருட்களை கடத்திருப்பமுயற்சியில் ஈடுபட்டிருந்த கோஷ்டியொன்றை அமெரிக்கப் பொலிசார் மடக்கிப் பிடித்திருக்கிறார்கள். இந்தக் கோஷ்டியில் 23 பிரஞ்சுக்காரர்களும் 3 அமெரிக்கர்களும் சம்பந்தப்பட்டிருப்பதாகத்தெரிகின்றது.

## சுழிபுரம் கி. ச. தீர்மானம்

சுழிபுரம், புதன்

சுழிபுரம் கிராம சபையினர் பஸ்ஸின் வண்டிக்கான இவ்வாண்டு நம்பர் தகடு மூன்று நிறம் கொண்டதாய் இருக்கவேண்டும் என்று வாக்கெடுப்பு மூலம் தீர்மானித்துள்ளனர்.

கிராம சபைத் தலைவர் திரு க சுந்தரசுவாமி தலைமையில் கூட்டம் நடைபெற்றது.


Cockroaches?



BAYGON BAYER
wipes out pests!

பேகோன்
ஹெகெம்
லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி,
கொழும்பு.

வட இலங்கை

# சங்கீத சபையின் இசைப் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், வியா. வடஇலங்கை சங்கீதசபை கடந்த ஆண்டு நடத்திய இசைப்பரீட்சையில் சித்தி யடைந்தவர்கள் விபரம் கீழே தரப்படுகிறது. இப் பகுதி முன்னர் தவறுதலாக 'ஈழநாடு' இதழில் விடுபட்டுப் போயிற்று.

மூன்றாம்பகுதி
சாதாரணபிரிவு

யாழ்ப்பாணம்: வாய்ப்பாட்டு- திலகத்தேவி இதம்பரம்பிள்ளை; திருமதி கமலநாயகி முருகையா; சந்திரிகா சுப்பிரமணியம்; கருணாகரவல்லி செல்வத்துரை; இந்திரமதி மகேந்திரன்; நித்தியாநந்தி இராமநாதன்; குணரஞ்சினி சிவானந்தன்; சுபாஷினி மீனாட்சிசுந்தரம்; பேரின்பமாலினி அருள்பிரகாசம்; அன்னலட்சுமி தம்பு; சந்திரகலா செல்வரத்தினம்; சாந்தினி நடராசா; மகேந்திரராசா விஜயகமூர்த்தி; வசந்தாதேவி விஸ்வரெட்ணம்; பார்வதி ஆனந்தநடராஜக்குருக்கள்; ஜெயதேவி நவரத்தினம்; நிர்மலாதேவி கார்த்திகேசு; திருமகள் சண்முகம்; வாசுதேவி வடுகநாதர்; தயாவதனி கோபாலசிங்கம்; விமலராணி சின்னத்துரை; செல்வராணி நடராசா; யசோதரா கந்தசாமி; பிரபா சந்திரசேகரா; மஞ்சுளாதேவி துரைசிங்கம்; இதையா அமிர்தரத்தினம்; யமுனாவதி அமிர்தரத்தினம்; சைத்திரேசிபாரெத்தினம்; சரோஜினிதேவி கந்தையா; சிவதேவி இராமலிங்கம்; மகேஸ்வரி கணபதிப்பிள்ளை; நிரஞ்சன் நடராசா; இந்திராணி பெரியகருப்பப்பிள்ளை. வாய்ப்பாட்டு வயலின்- பத்மினி அரசரத்தினம்; சாந்தினி சிவராசா: வயலின்- கிஜிதா செல்வராஜன்; ராஜேஸ்வரி வாமதேவா; சத்தியபாமா கந்தையா; வீணை- திரிபுரசுந்தரி சரவணமுத்து.

கோப்பாய்: வயலின்-அமிர்தரஞ்சிதம் முருகேசு(மேலதிக பாடம்), நஞ்சுளாதேவி தர்மலிங்கம், வாய்ப்பாட்டு: கனகேஸ்வரி குருசாமி, இந்திர பொன்னுத்துரை, பரமேஸ்வரி கனகரத்தினம், கலாவல்லி கனகரத்தினம். வீணை: சாந்தாதேவி இரகுநாத முதலியார்.

தெல்லிப்பழை: வயலின்- நளாயினிதேவி நடராசா. வாய்ப்பாட்டு- ரஞ்சனி கந்தையா; அமலாம்பிகை தங்கவடிவேல், தேனமலர் நவரத்தினம். மேரி ஜெயராணி ஞானப்பிரகாசம், உஷா நடராசா, கிரிஜா பரநிருபசிங்கம். சத்தியநாதன் சிவானந்தராசா, நயாயகி இளையதம்பி, தேன்மொழி குமாரசுந்தரம் (மேலதிகபாடம்) வீணை-ஜெயமலர் நடராசா.

பருத்தித்துறை: வயலின் பாக்கியம் வீரகத்தியார், மதனிகா சிதம்பரப்பிள்ளை. வாய்ப்பாட்டு- இந்திரகுமாரி நடராஜா, ரதிவதனி கந்தப்பு, சந்திராதேவி விஸ்வநாதன், கோசலை முத்தையா, திலகவதி இராசரத்தினம், மனோகரி அற்புதநாதன். வீணை- சாந்தலக்ஷ்மி கணபதிப்பிள்ளை, வாய்ப்பாட்டு வீணை- பாலேஸ்வரி பாலசுப்பிரமணியம்.

சாவகச்சேரி: வாய்ப்பாட்டு- புஸ்பராணி மாணிக்கம், விஜயகுலராணி சுப்பிரமணியம், கமலாதேவி சந்திரசேகரம், திருமகள் திருச்சிற்றம்பலம்.

நான்காம் பகுதி
முதலாம் பிரிவு

யாழ்ப்பாணம்: வாய்ப்பாட்டு- இருபாமணி விஸ்வலிங்கம்.

கோப்பாய்: வாய்ப்பாட்டு- வசந்தாதேவி தர்மலிங்கம்.

சாதாரண பிரிவு

கொழும்பு: வயலின்-காஞ்சனா சச்சிதானந்தம், நஞ்சிதமலர் சச்சிதானந்தம். வாய்ப்பாட்டு- துஷ்யந்தி ஆசீர்வாதம். வீணை- ஈஸ்வரி நடராசா. வாய்ப்பாட்டு, வயலின்- சரோஜினிதேவி சதாசிவம்.

x செம்முறைப் பரீட்சையில் விசேட சித்தி.

[முற்றும்]

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(20-1-72) வியாழன்

(செய்திகள்: காலை 6-30; பகல் 12-45 மாலை 6-00. இரவு 9-00)

294 மீ அலை 59 மீ

காலை 6-15 நாதாஞ்சலி- மங்களவாத்தியம் 6-20 சைவநற்சிந்தனை- நா. அருணாசலம். 6-25 இஸ்லாமிய நற்சிந்தனை. 6-50 வரசம்பவம். 7-05 துதிப்பாடல். 7-30 குரல் வளை, 8-00 இசைவேளை எம். ஆர் கோவிந்தராஜா. 8-15 இஸ்லாமியகீதம்

மாலை 6-15 ஒடிவிளையாடு பாப்பா. நடாத்துபவர் ராஜேஸ் அக்கா. 6-30 நாளவாத்தியக் கச்சேரி.

இரவு 7-00 தமிழ் மூலம் சிங்களம் 7-15 சமயமும் யுகமும். 7-30 வெளிநாட்டுச் செய்திகள், 7-35 மெல்லிசை வாத்தியக் கோஷ்டி இசையமைப்பு ஆர். முத்துஸ்வாமி, 7-45 ஐக்கியநாடுகள் சித்திரம். பிரதி தயாரிப்பு சரவணமுத்து 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 உரையாடல், நடத்துபவர்: எஸ். சிவநாயகம் 10-00 இசை நிகழ்ச்சி, விளக்கம்தருபவர் ந. சண்முகரத்தினம்

## நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், வியாழன் கொலலைக்கடி சைவ வித்தியாசாலையின் நூற்றாண்டு விழா இம் மாதம் 21ம் திகதி வித்தியாசாலையில் நடைபெறுகிறது. இவ் விழாவை யொட்டி பெற்றோர் தினமும், பரிசளிப்பும். நூற்றாண்டு மலர் வெளியீடும் நடைபெறவுள்ளன.

இரு தினங்களுக்கு நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாக வித்தியாதிகாரி திரு. டபிள்யு டி. சி. மஹாகந்தில, காங்கேசன்துறை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு எம். ஜே வி செல்வநாயகம் ஆகிய இருவரும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்கிறார்கள்.


பாடசாலை மாணவர்களுக்குரிய

* பாடசாலைப் புத்தகங்கள்
* பாடசாலை உபகரணங்கள்

தகுந்த கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

ஞானசுரபி புத்தகக்கம்பனி

237, மின்சாரநிலைய வீதி — யாழ்ப்பாணம்.



34-வது மகாஜன சம்பத சிட்டிழுப்பு
ஜனவரி 31-ந் திகதி நாவலப்பிட்டியில் நடைபெறும்

விசேட பரிசுகளாக இறக்குமதி செய்யப்பட்ட கைக்கடிகாரங்கள் - அச்சடி நைலெக்ஸ் சாறிகள்

1-ம், 2-ம், 3-ம் பரிசு பெறும் டிக்கெட்டுகளுக்குரியவர்கள், தேசிய லொத்தர்சபைக்கு ரூபா 1000/- செலுத்தி இறக்குமதி செய்த கூறை பட்டுச்சேலை ஒன்றை அல்லது ரூபா 750/- செலுத்தி இறக்குமதி செய்த இணைக்கூறை பட்டுச்சேலை ஒன்றை, இருப்பு முடியும்வரை, 'முதல் வருபவருக்கு முதல் தருவது' என்ற அடிப்படையில் பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுபெறும் டிக்கெட்டுகள் உள்ளடங்கிய எல்லா நூறு (100) இலக்கங்களுக்குரியவர்கள் தேசிய லொத்தர் சபைக்கு ரூபா 300/-க்கு மேற்படாமல் செலுத்தி ரகம் குறிப்பிடப்படாத இறக்குமதி செய்த கைக்கடிகாரத்தை அல்லது ரூபா 60/- செலுத்தி இறக்குமதி செய்த அச்சடி நைலெக்ஸ் சாறி ஒன்றை, இருப்பு முடியும்வரை 'முதல் வருபவருக்கு முதல் தருவது' என்னும் அடிப்படையில் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பிட்ட கையிருப்பே உள்ளதால், இவ்விசேஷ பரிசுகள் யாவும், இருப்பு முடியும்வரை 'முதல் வருபவருக்கு முதல் தருவது' என்னும் அடிப்படையில் 8-2-72 முதல் 17-2-72 வரை (இரு தினங்களும் உட்பட) தினசரி காலை 9-00 மணி முதல் மாலை 3-00 மணிவரை தினசரி அடையாளச் சின்னங்கள் கொடுப்பதன்மூலம் வழங்கப்படும். ஒரு நபர் ஒரு முறையில் ஒரு டிக்கெட்டையே கையளிக்க முடியும்.

இன்றே ஒரு மகாஜன சம்பத டிக்கெட்டை வாங்கி விசேட பரிசுக்கும் உரியவராகுங்கள்!

விசேட பரிசுகளுக்குரியவர்கள், விசேட பரிசாகப்பெறும் பொருட்களை அவை பெறும் இடத்தில் வைத்தே பரீட்சித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். ஏதாவது பழுது அல்லது சேதம் இருப்பின் அதை உடனே திருப்பிக் கொடுத்துவிடவும். எடுத்துச் செல்லப்பட்ட பொருட்கள் பின்னர் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. பெறுமிடத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட பொருட்களில் பின்னர் பழுது அல்லது சேதம் இருப்பின் அப்பொருட்களுக்கு சபை பொறுப்பானதல்ல.

தேசிய லொத்தர் சபை



சக்தி வாய்ந்த சர்வ பூச்சி நாசினி

பொலிடோல் ஈ·605



எல்லாக் கிருமிப் பீடைகளையும் இல்லாதொழித்து, பயிர்கள் செழிக்கவும் விளைச்சல் பெருகவும் செய்வது பொலிடோல்.

அழுக்கணவன், ஒட்டுண்ணி, பயிர்ப்பேன், பனிப்பூச்சி, இலையரிப் புழு போன்றவற்றை அறு அடியோடு தொலைத்துவிடும்.

நெல், புகையிலை, உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம், காய்கறி முதலிய எவ்வித பயிர்ச் செய்கையையும் பாதிக்கும் எல்லாவித பூச்சி, புழுக்கள், கிருமிகளையும் அழிக்கும் சக்தி வாய்ந்தது— பொலிடோல்.

பொலிடோல் ஒரு பேயர் தயாரிப்பு. நம்பிக்கையான விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும். இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள்— பேயர் விவசாய ரசாயனப் பொருள்கள்.



மூலப் பொருட் சத்து உற்பத்தியாளர்: பேயர், ஜெர்மனி

BAYER

இலங்கையில் தயாரிப்போர்: ஹேக்கெம் லிமிட்டெட் 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.

தற்பொழுது போத்தல்களில் விற்பனைசெய்யப்படுகிறது. புதிய விலைகள் பின்வருமாறு:

4 அவுன்ஸ் போத்தல் ரூ 5/75 10 அவுன்ஸ் போத்தல் ரூ 13/-
16 அவுன்ஸ் போத்தல் ரூ 18/50

# வியட்நாமில் அமெரிக்கரின் மற்றுமோர் படுகொலை

நியூயோர்க், ஜன. 19 தென் வியட்நாமில் மைலாய் படுகொலை நடந்த ஒரு மணிநேரத்தில் தென் வியட்நாமின் இன்னோர் பகுதியான மைக்கேல் என்னும் இடத்தில் நூற்றுக்குமேற்பட்ட பெண்களையும் குழந்தைகளையும் வயோதிபர்களையும் அமெரிக்கத் துருப்புகள் சுட்டுக் கொன்றனர் என்று சஞ்சிகை ஒன்றில் திரு. சுமூர் கெர்ஸ் எழுதியுள்ளார்.

மைலாய் படுகொலை பற்றி முதலில் தகவல் தெரிவித்தவர் திரு. கெர்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விஷயம் பற்றி விசாரணை செய்த கமிஷன் அறிக்கையின் நகல் முழுவதும் தம்வசம் இருப்பதாகவும் இதில் 347 பேர் கொலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் அவர் தெரிவித்துள்ளார்.

## இன்றைய பலன்

தை மாதம் 6-ந் திகதி [20-1-72]

மேஷம்- நீண்டநாள் பிரச்சினைக்கு இன்று நல்ல முடிவு ஏற்படும்; தாய்வழிமூலம் தனவரவுக்கும் இடமுண்டு; முன்னேற்றமான தினம்.

ரிஷபம்: புத்திரவழியால் புகழுக்கும் இடமுண்டு; புதிய பாதையில் நடைபோடுவீர்கள். குடும்பத்திலும் பிணைப்புகள் பலப்படும்.

மிதுனம்- எதிரிகளின் சூழ்ச்சிகள் பலமாக இருக்கும்; தொழில் புரியும் இடத்தில் தொல்லைகள் முளைக்கக்கூடும்; மட்டமான நாள்.

கடகம்- அரும்பிய காதல் இன்று கரும்புபோல் சுவைக்கும்; [illegible] விரும்பிய என்னம்போல நல்லவை நடக்கும் [illegible].

சிம்மம்- முன்னேற்றத்தில் தடையேற்படும், [illegible] ஆதரவு [illegible]களுடன் பகைத்துக்கொள்ள வேண்டாம்

கன்னி- பிறருக்கு உதவுவதில் முன்நிற்பீர்கள்; இதன் மூலம் பணமும் சேரலாகும்; அரசியல் வாதிகளுக்கு இன்று அதிர்ஷ்டதினம்.

துலாம்- சுற்றத்தால் பயன் இன்று கிட்டாமல் இருக்கும்; அறிஞர்கள் போற்றுவர்; ஆதரவும் பெருகும்.

விருச்சிகம்- நீண்டநாள் கோடுக்கல் வாங்கல் இன்று நிவர்த்தியாகும்; கற்றலில் மதிப்பு உயரும்! பெரிய மனிதர்களின் ஆதரவு பெருகும்.

தனுசு- பொருள்முடை தென்படும்; கடன்பட நேரிடும்; கொடுத்தவர்க்கு நிறை நிறைவேற்ற முடியாது போகலாம்,

மகரம் அவசரமுடிவினால் அரியசந்தர்ப்பத்தை இழக்கக்கூடும், ஆத்திரம் வழக்கு விவகாரங்களில் சடுபடச் செய்யும்.

கும்பம்- பேச்சு வன்மையினால் பெரும்புகழ் சேரும்; பெரியோர்களும் ஆசிகூறுவர்; அரசியல் வாதிகளின் அதிகசெல்வாக்கைப் பெறுவர்.

மீனம்- சகோதர வழியால் மனதில் சஞ்சலம் தோன்றக்கூடும். உள்வீட்டிலேயே பூசல் தலைதூக்கும்; உஷாராக இருக்க வேண்டும்.

சோதிட கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## கடற்படையில் பெரும் சாதனை

லண்டன். ஜன. 19 உலகில் முதலாவது பிளாஸ்டிக் கடற்படை படகொன்றை பிரிட்டன் தயாரித்துள்ளது. இது கண்ணிவெடிகளை அகற்றும் கடற்படைப் படகாகும்.

முதலில் இப்படகு செய்வதற்கு அதிகசெலவானாலும், பிளாஸ்டிக்கில் செய்யப்படும்படகுகள் கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு. மற்ற உலோகங்களினால் செய்யப்படும் படகுகளை விட வசதியுடையதென கடற்படை நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

## ஜப்பான் குறைந்ததல்ல!

டோக்கியோ, ஜன. 19 ஜப்பான் அதிகவேகமாகச்செல்லும் கப்பல் ஒன்றை வெள்ளோட்டம் விட்டுள்ளது. இந்தக்கப்பலைச் செய்வதற்கு 7கோடி 80லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இக்கப்பல் 125 மைல் வேகத்தில் செல்லவல்லது. 114 பிரயாணிகளையும் 292 கார்களையும் ஏற்றிச் செல்லும் வசதிகளையும் கொண்டது இக்கப்பல்.

## திடீர்—

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

விலைக்கு விற்ற ஒருவரும் சிக்கிக்கொண்டார்கள்.

இவ் வியாபாரிகளுக்கெதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்குதலுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தங்கள் பிள்ளைகளுக்கு அப்பியாசக் கொப்பிகள் பெறமுடியவில்லையென பல பெற்றோர்கள் புகார்செய்ததைத் தொடர்ந்து திடீர் பரிசோதனைக் குழு நேற்று யாழ்ப்பாணத்திலுள்ள சகல புத்தகநிலையங்களையும் திடீர் பரிசோதனை செய்தது. இதனைத்தொடர்ந்து சில புத்தகநிலையங்களில் திடீர் பரிசோதனைக் குழுவின் மேற்பார்வையில் அப்பியாசக் கொப்பிகள் விற்பனை நடைபெற்றது.

## இந்திய—

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

திக்லை என்றார்

மேலும் ஆளும் மத்திய அமைச்சர்களை கண்டித்தவர்களும் மற்றவர்களும் குறைகூறக்கூடாதென்றும் இவ்விதம் இரு பகுதியினருக்கும் இருதகராறு இருப்பதாகக் காட்டிக்கொண்டாலும் கூட அதைப் பாகிஸ்தான் போன்ற பகை நாடுகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தக்கூடாதென்றும் மாநிலத்தில் அரசு செய்யும் விஷயங்களை திமு காவுக்கும் மற்றக் கட்சிகளுக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்தும்வகையில் மக்களிடம் எடுத்துச் செல்லுமாறு தமது கட்சித் தலைவர்களையும் உறுப்பினர்களையும் அவர் கேட்டுக்கொண்டார்.

## தீ!

கொழும்பு, புதன் தபால் அமைச்சின் எட்டு மாடிக்கட்டிடம் நேற்று முற்பகல் 10 மணியளவில் தீப்பற்றிக் கொண்டது. கட்டடமெங்கும் ஒரே புகைமயமாகக் காணப்பட்டது உடனடியாக அங்கு விரைந்த தீயணைக்கும் படையினர் சில நிமிடங்களில் தீயை அணைத்து விட்டார்கள்.

அமைச்சின் ஐந்தாவது மாடியில் காகிதக் குப்பையில் எவரோ சிகரெட்துண்டை எறிந்துவிட்டதனால் தான் தீப்பற்றிக்கொண்டதாக நம்பப்படுகிறது. (நா)

## பொலிஸ் ஆஸ்பத்திரியாக மாறும்

கொழும்பு. புதன் மொறவீ-கிங்ஸி வீதியிலுள்ள விசேஷ வைத்திய நிபுணர்களின் ஆலோசனைக்கூடம் பொலிஸ் ஆஸ்பத்திரியாக மாற்றப்படவிருக்கிறது

இதுசம்பந்தமாக மருத்துவ அதிகாரிகளுக்கும் பொலிஸாருக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இக்கட்டடம் பெரியாஸ்பத்திரிக்கு அண்மையில் இருப்பதால் தங்களுக்கு மிக வசதியாயிருக்கிறது என பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்

இதற்கிடையில் விசேஷ வைத்தியநிபுணர்கள் தனிப்பட்ட நோயாளர் சிகிச்சைகளை அரசாங்கம் தடை செய்வதுபற்றி இம்மாதம் 22-ந் திகதி பொதுமருத்துவச்சபை கூடும் இக்கூட்டத்தில் டாக்டர்களின் வேதனம் உயர்த்தப்படுவது பற்றியும் ஆலோசிக்கும். (நா)

## இருவர் மட்டுமே!

கொழும்பு, புதன் பதினைந்து அரசாங்க வைத்திய நிபுணர்கள் விலகிவிட்டதாக சிங்கள தினசரி ஒன்றில் இன்று வெளியாகியுள்ள செய்தி தவறானதென்றும் இரண்டு வைத்திய நிபுணர்கள் மட்டுமே ராஜினாமாச் செய்துள்ளார்களென்றும் சுகாதார சேவை அதிபர் தெரிவிக்கிறார்

## க. பொ. த. (உயர்) முடிவுகள் இன்று!

கொழும்பு, வியா: கடந்த வருடம் நடந்த கல்விப் பொதுத்தராதர பத்திர உயர்தரபரீட்சையின் முடிவுகள் இன்று வெளிவருகிறது.

இவ் வருடத்துக்கான உயர்தரப் பரீட்சை ஏப்ரல் 15-ம் திகதி நடைபெறும். கலை விஞ்ஞான இரு பிரிவுகளுக்கும் நடக்கும் இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முடிவு திகதி அடுத்த மாதம் 21 ஆகும்.


பாடசாலை மாணவர்களுக்கு ஒரு
விசேஷ வெகுமதி

புறூக் பொண்ட் ஸ்தாபனத்தாரிடம் இருந்து உங்களுக்கென ஓர் பாடசாலை நேரசூசிகையை (TimeTable) நீங்கள் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். நீங்கள் செய்ய வேண்டியது யாதெனில் 2 அவுன்ஸ் வெட்டி கோறு தேயிலை பெக்கட்டை உங்கள்பெயர்விலாசத்துடன் தபால் பெட்டி இலக்கம்: 107. கொழும்பு. என்ற முகவரிக்கு எழுதி 10-2-72க்கு முன்னதாக அனுப்பவும். 3373




# தலைவலி, நோவுகளைச் சகித்துக் கொண்டு வீணுகச் சங்கடப்பட வேண்டாம்




## டிஸ்பிரின் உட்கொண்டு அதிதுரித நிவாரணம் பெறுங்கள்

டிஸ்பிரின் அதிதுரித நிவாரணம் தரும்
தலைவலி, நோவுகளுக்கான மருந்துகள் அதிதுரித நிவாரணம் தர வேண்டும். டிஸ்பிரின், கரையக் கூடிய அஸ்பிரின் கொண்டதாகையால் மிக விரைவாகவும் முற்றாகவும் கரைந்து இரத்தோட்டத்திற் சீக்கிரம் செறிகிறது. இரத்தோட்டத்தில் விரைவாகச் செறிவதால் மிக வேகமாக உடம்பிற் செயலாற்றி உங்களுக்கு அதிதுரித நிவாரணம் தருகிறது.
எவ்வித பயமுமின்றி டிஸ்பிரின் உட்கொள்ளலாம்
டிஸ்பிரின் முற்றாகக் கரைவதாகையால், மற்ற மருந்துகள் போல உடம்புக்குப் பாதகமான கரையாத துகள்களை வயிற்றில் விட்டு வைப்பதில்லை. சில புதிய மருந்துகளிற்போல, பாதகமான சேர்பொருள்கள் எதுவும் டிஸ்பிரினிற் கிடையாது. எனவே எவ்வித பயமுமின்றி டிஸ்பிரின் உட்கொள்ளலாம்.
டாக்டர்கள் சிபாரிசு செய்வது டிஸ்பிரின்
உலகமெங்குமுள்ள வைத்திய நிபுணர்கள், அதிதுரிதமான அதிவன்மையான நிவாரணத்துக்கு டிஸ்பிரினைச் சிபாரிசு செய்கிறார்கள். ஏனெனில் அதி சிறந்த வலி நிவாரணிகளில் ஒன்று டிஸ்பிரின் என்பது அவர்களுக்கு அனுபவத்தில் தெரியும்.

தலைவலி, நோவு, சளிசுரம், காய்ச்சல், தடிமல், மாதவிடாய் வலி, வாத நோவுகளிலிருந்து அதிதுரித நிவாரணம் பெற டிஸ்பிரின் பாவியுங்கள்.

- மாத்திரைகளை நீரிற் கரையவிட்டு அல்லது முழுமையாக ஏதாவது பானத்துடன் உட்கொள்ளுங்கள்.
- குழந்தைகளுக்கு: பெட்டியிலுள்ள அளவுப் பிரமாணங்களைப் பாருங்கள்.

P.91498 றெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி

